RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023- 2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-4 இதழ்-107 24 ஏப்ரல் வியாழக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

## தமிழகத்தில் ஏப். 28 வரை மழை பெய்ய வாய்ப்பு

சென்னை,, ஏப்.24



தமிழகத்தில் இன்று முதல் வரும் 28ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்தமிழக கடலோரப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும், தென்னிந்தியப் பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழதத்தில் இன்று (ஏப்.23) ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வரும் 24 முதல் 28ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.


தமிழகத்தில் இன்று ஓரிரு இடங்களிலும், வரும் 24 முதல் 26ம் தேதி வரை சில இடங்களிலும் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவில் இருக்கும்.

தமிழகத்தில் ஏப். 22ம் தேதி (நேற்று) காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் 3 செ.மீ., கோவை மாவட்டம் ஆழியாறு, தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், பேச்சிப்பாறை, சுருளக்கோடு, விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை ஆகிய இடங்களில் 2 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு கண்டனம் 35 ஆண்டுகளில் முதல்முறையாக காஷ்மீரில் முழு அடைப்பு

ஸ்ரீநகர், ஏப்.24

காஷ்மீர் பள்ளத்தாக்கின் பஹல்காம் சுற்றுலாத்தலத்தில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலைக் கண்டித்து ஜம்மு காஷ்மீரில் 35 ஆண்டுகளுக்கு பின்பு முதல் முறையாக முழு கடையடைப்பு போராட்டம் நடப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



தெற்கு காஷ்மீரின் சுற்றுலாத் தலமான பஹல்காமில் பயங்கரவாதிகள் செவ்வாய்க்கிழமை நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் சுற்றுலா பயணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து பள்ளத்தாக்கு முழுவதும், குறிப்பாக சுற்றுலா தலங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பயங்கரவாத தாக்குதலைக் கண்டித்து காஷ்மீரில் கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது. இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: தலைநகர் ஸ்ரீநகரில் பெரும்பாலான கடைகளும், பெட்ரோல் பங்குகளும் மூடப்பட்டிருந்தன. நகர்முழுவதும் அத்தியாவசிய பொருள்களுக்கான கடைகள் மட்டுமே திறந்திருந்தன.

பொதுப்போக்குவரத்து இயக்கப்படவில்லை. காஷ்மீர் முழுவதும் தனியார் பள்ளிகளும் இயங்கவில்லை. பிற மாவட்டத் தலைநகரங்களிலும் கடையடைப்புப் போராட்டம் நடந்தது. அதேபோல் பல்வேறு இடங்களில் மக்கள் அமைதியான முறையில் போராட்டத்திலும் ஈடுபட்டனர். அப்போது பஹல்காம் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து, அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தெற்கு காஷ்மீரின் அனந்தநாக் மாவட்டத்தின் பஹல்காம் புல்வெளியில் நடந்த தாக்குதலைக் கண்டித்து பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக மத அமைப்புகள், வணிக அமைப்புகள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் காஷ்மீரில் முழு கடையடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளன.

ஜம்மு காஷ்மீரில் ஆளும் தேசிய மாநாடு கட்சி, மக்கள் ஜனநாயக கட்சி, மக்கள் மாநாட்டு கட்சி மற்றும் அப்னி கட்சி போன்ற கட்சிகள் முழு அடைப்பு போராட்டத்துக்கு ஆதரவளித்துள்ளன. அதேபோல், ஹூரியத் மாநாட்டின் தலைவரான உமர் ஃபரூக் தலைமையிலான பல்வேறு மத அமைப்புகளின் கூட்டமைப்பான முதாஹிதா மஜ்லிஸ் உலேமா, "காஷ்மீர் மக்கள் முழு அடைப்பு போராட்டத்தில் பங்கேற்று பயங்கரவாத தாக்குதலுக்கான தங்களின் எதிர்ப்பை பதிவு செய்யவேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் வர்த்தகம் மற்றும் தொழில் சபை, காஷ்மீர் வர்த்தகர் மற்றும் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு உள்ளிட்ட வர்த்தம் மற்றும் சுற்றுலா அமைப்புகளும் முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளன.

அதேபோல் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு மரியாதை மற்றும் ஒற்றுமையைத் தெரிவிக்கும் விதமாக ஜம்மு காஷ்மீரில் புதன்கிழமை அனைத்து தனியார் பள்ளிகளும் மூடப்பட்டிருக்கும் என்று ஜம்மு காஷ்மீர் தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

காஷ்மீர் பல்கலையும் புதன்கிழமை நடைபெறும் அனைத்துத் தேர்வுகளையும் ஒத்திவைத்துள்ளது. பயங்கரவாத தாக்குதலை முன்னிட்டு காஷ்மீர் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

## கடுமையாக தேர்தல் பணியாற்ற வேண்டும் மாவட்ட செயலாளர்களுக்கு திருமாவளவன் அறிவுறுத்தல்

சென்னை, ஏப்.24



மாவட்ட செயலாளர்கள், பொறுப்பாளர்கள் கடுமையாக தேர்தல் பணியாற்ற வேண்டும் என்று விசிக தலைவர் திருமாவளவன் அறிவுறுத்தியுள்ளார். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மறுசீரமைப்பு கூட்டம் சென்னை அசோக்நகரில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடந்தது.

கட்சியின் தலைவர் திருமாவளவன் தலைமையில் நடந்த கூட்டத்தில், 2026 சட்டசபை தேர்தலை முன்னிட்டு, நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டிய களப்பணிகள், புதிய மாவட்டச் செயலாளர்கள் நியமனம் குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட செயலாளர்கள் நியமனம் குறித்து நிர்வாகிகளிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் உச்சநீதிமன்ற தீர்ப்பை மதித்து ஆளுநர் ஆர்.என்.ரவியை, குடியரசு உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும். தீர்ப்பை மதிக்காமல் துணைவேந்தர்கள் கூட்டத்தை கூட்டியுள்ள ஆர்.என்.ரவி மீதும், நீதிமன்றத்தை அவமதிக்கும் விதமாக கருத்து தெரிவித்துள்ள பாஜக எம்பி நிஷிகாந்த் துபே மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

தமிழகம் முழுவதும் அதிகரித்து வரும் சாதிய வன் கொடுமைகளைக் கட்டுப்படுத்த அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கல்வி நிலையங்களில் நிலவும் சாதிய பாகுபாடுகளை அகற்றுவதற்கான பரிந்துரைகளை ஓய்வுபெற்ற நீதிபதி சந்துருவின் ஒரு நபர் ஆணையம் தமிழக அரசிடம் வழங்கி ஓராண்டு ஆகிறது.

இனியும் காலம் தாழ்த்தாமல் ரோகித் வெமுலா சட்டத்தைத் அரசு இயற்ற வேண்டும். அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள வக்பு திருத்த சட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும். வக்பு திருத்த சட்டத்தை எதிர்த்து விசிக சார்பில் திருச்சியில் மே 31ம் தேதி பேரணி நடத்தப்படும் என்பது உள்ளிட்ட 13 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

விசிக நிர்வாகிகளிடம் கேட்ட போது, "சட்டப்பேரவை தேர்தல் நெருங்குவதால் தேர்தலில் கவனம் செலுத்துவது அவசியம். மாவட்ட செயலாளர்கள் நியமத்தை தள்ளி வைக்க முடியாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட செயலாளர்கள் கிராமம் தோறும் சென்று முகாம் அமைக்க வேண்டும்.

அனைத்து தரப்பு மக்களையும் சந்தித்து பேச வேண்டும். ஒரு குறிப்பிட்ட தரப்பு மக்களை மட்டுமே நாம் சந்தித்து பேசக்கூடாது என திருமாவளவன் அறிவுறுத்தியுள்ளார். மே 15ம் தேதிக்குள் மாவட்ட செயலாளர்கள் முழுமையாக நியமிக்கப்பட்டு விடுவார்கள். மாவட்ட செயலாளர்கள், மேலிட பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து நிர்வாகிகளும் கடுமையான தேர்தல் பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது" என்றனர்.

## சொத்து குவிப்பு வழக்கில் அமைச்சர் துரைமுருகன், அவரது குடும்பத்தினரை விடுவித்த உத்தரவு ரத்து

சென்னை, ஏப்.24



வருமானத்துக்கு அதிகமாக மூன்று கோடி ரூபாய் சொத்து சேர்த்த வழக்கில் அமைச்சர் துரைமுருகன் மற்றும் அவரது குடும்பத்தினரை விடுவித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்த சென்னை உயர்நீதிமன்றம், இந்த வழக்கை ஆறு மாதங்களுக்குள் விசாரித்து முடிக்க வேண்டும் என வேலூர் சிறப்பு நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த 1996 முதல் 2001 வரையிலான காலக்கட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சராக பதவி வகித்த துரைமுருகன் வருமானத்துக்கு அதிகமாக 3 கோடியே 92 லட்சம் ரூபாய் அளவுக்கு சொத்து சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத் துறை தரப்பில் 2002ல் வழக்கு தொடரப்பட்டது.

அமைச்சர் துரைமுருகன், அவரது மனைவி, மகன், மருமகள் மற்றும் சகோதரர் மீது தொடரப்பட்ட வழக்கில் இருந்து அவர்களை விடுவித்து வேலூர் நீதிமன்றம் 2007ல் உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து 2013ல் அதிமுக ஆட்சியில் மறு ஆய்வு மனுதாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை நீதிபதி வேல்முருகன் விசாரித்தார்.

லஞ்ச ஒழிப்புத் துறை தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன், வழக்கு தொடர்பான முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்றப்பத்திரிகைகளை விளக்கி வாதிட்டார்.

துரைமுருகன் சார்பில் மூத்த வழக்கறிஞர் சித்தார்த் லுத்ராவும், அவரது குடும்பத்தினர் சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆகியோர் ஆஜராகி வாதங்களை முன் வைத்தனர். அவர்கள் தங்கள் வாதத்தில், "வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்களின் தனிப்பட்ட தொழில், குடும்ப வருமானத்தை அமைச்சர் துரைமுருகன் வருமானமாக லஞ்ச ஒழிப்புத் துறையினர் காட்டியுள்ளனர்.

வழக்கு சம்பந்தப்பட்ட காலத்துக்கு முன் வாங்கப்பட்ட சொத்துக்களும் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளன. குற்றம் சாட்டப்பட்ட அமைச்சரின் குடும்பத்தினரை, அமைச்சரின் பினாமி என குறிப்பிட எந்த ஆதாரங்களும் இல்லை. குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் தனித்தனியாக, முறையாக வருமான வரிக் கணக்குகளை தாக்கல் செய்துள்ளனர். அவற்றை லஞ்ச ஒழிப்புத் துறையும் ஏற்றுக் கொண்டுள்ளது. காவல் கண்காணிப்பாளர் அந்தஸ்து அதிகாரி விசாரிக்க வேண்டிய வழக்கை, அதிகார வரம்பு இல்லாத ஆய்வாளர் இந்த வழக்கை புலன் விசாரணை செய்துள்ளார்.

வழக்கு தொடர்வதற்கு, சட்டப்படி அனுமதி பெறப்பட வில்லை. இதை எல்லாம் கருத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்தது. அந்த உத்தரவை எதிர்த்து மறு ஆய்வு மனு விசாரணைக்கு உகந்ததல்ல என்பதால், இந்த மறு ஆய்வு மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்" என வாதிட்டனர். அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, லஞ்ச ஒழிப்புத் துறையின் மறு ஆய்வு மனு மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தார்.

இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி வேல்முருகன், லஞ்ச ஒழிப்புத் துறை மறு ஆய்வு மனுவை ஏற்று, அமைச்சர் துரைமுருகன் மற்றும் குடும்பத்தினரை விடுவித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார். மேலும், வழக்கில் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்து, சாட்சி விசாரணையை துவங்க, வேலூர் சிறப்பு நீதிமன்றத்துக்கு உத்தரவிட்ட நீதிபதி, 19962001 காலத்தில் சொத்து சேர்த்த வழக்கு என்பதால், இந்த வழக்கை ஆறு மாதங்களுக்குள் விசாரித்து முடிக்கும்படி, சிறப்பு நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

## பஹல்காம் தாக்குதல் பயங்கரவாதிகள் தண்டனையில் இருந்து தப்பக் கூடாது: கார்கே

புதுடெல்லி, ஏப்.24

"பஹல்காமில் நடந்த கொடூரமான தாக்குதலுக்கு காரணமானவர்கள் தண்டனையில் இருந்து தப்பிவிடக்கூடாது." என்று தாக்குதலைக் கண்டித்துள்ள காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, "பாதிக்கப்பட்ட அப்பாவிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்." என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் கார்கே வெளியிட்டுள்ள பதிவில், "பஹல்காமில் நடந்த இழிவான கொலை தாக்குதல் குறித்து நேற்று பின்னிரவில் உள்துறை அமைச்சர் அமித் ஷா, ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா மற்றும் ஜம்மு காஷ்மீர் காங்கிரஸின் மூத்த தலைவருடன் பேசினேன். இந்தக் கொடூரமான தாக்குதலுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப் படாமல் போகக்கூடாது. பாதிக்கப்பட்ட அப்பாவிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

அதேபோல் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும் பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் குறித்தும், தற்போதைய சூழல் குறித்தும் உள்துறை அமைச்சர், காஷ்மீர் முதல்வர் மற்றும் ஜம்மு காஷ்மீர் காங்கிரஸ் தலைவர் தாரிக் கர்ராவுடன் பேசியதாக கூறியுள்ளார்.



தற்போது அமெரிக்க பயணத்தில் இருக்கும் ராகுல் காந்தி தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "பஹல்காம் கொடூரத் தாக்குதல் குறித்து உள்துறை அமைச்சர் அமித் ஷா, காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா மற்றும் ஜம்மு காஷ்மீர் காங்கிரஸ் தலைவர் தாரிக் கர்ராவுடன் பேசினேன். தற்போதைய நிலைகுறித்து விசாரித்து அறிந்து கொண்டேன். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதியும் முழு ஆதரவும் கிடைக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக செவ்வாய்க் கிழமை ராகுல் காந்தி தாக்குதலைக் கண்டித்து கூறுகையில், "பஹல்காமில் நடந்த கோழைத்தனமான பயங்கரவாத தாக்குதலில் சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்ட, காயம் அடைந்தது மிகவும் வேதனையைத் தருகிறது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயம் அடைந்தவர்கள் விரைவாக குணம் அடைய வேண்டுகிறேன். ஒட்டுமொத்த நாடும் பயங்கரவாதத்துக்கு எதிராக நிற்கிறது.

இனிமேலும் ஜம்மு காஷ்மீரில் நிலைமை சுமுகமாக உள்ளது என்று வெறுமனே கூறுவதற்கு பதிலாக, தற்போது அரசு இதற்கு பொறுப்பேற்றுக் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் எதிர்காலத்தில் நடக்கால் இருப்பதையும் அப்பாவி இந்தியர்களின் உயிர்கள் இதுபோல பறிக்கப்படாமல் இருப்பதையும் உறுதிசெய்யவேண்டும்." என்று தெரிவித்திருந்தார்.

## டாஸ்மாக் வழக்கில் விசாரணையை தொடர அமலாக்கத் துறைக்கு அனுமதி: உயர் நீதிமன்றம் அதிரடி

சென்னை, ஏப்.24

டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் அமலாக்கத் துறையினர் நடத்திய சோதனையை சட்ட விரோதமானது என அறிவிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

ஏப்ரல் 8ம் தேதி முதல் இந்த வழக்கின் இறுதி விசாரணை துவங்கியது. டாஸ்மாக் தரப்பில், "அமலாக்கத் துறையின் சோதனையின் போது பெண் அதிகாரிகள் உள்ளிட்டோர் தொடர்ந்து 60 மணி நேரம் ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருந்தனர். ஒரு சிலர் மட்டும் நள்ளிரவு ஒரு மணியளவில் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். தனிப்பட்ட தகவல்கள் அடங்கிய செல்போனை பறிமுதல் செய்வது அந்தரங்க உரிமைக்கு எதிரானது.

சோதனையின் போது, சில அதிகாரிகளை தூங்கவிடாமல் அமலாக்கத் துறையினர் மனித உரிமையை மீறியுள்ளனர். சட்டத்தை மதிக்காமல் தங்களது விருப்பத்திற்கு அமலாக்கத் துறையினர் செயல்பட்டுள்ளனர். எந்த வழக்கின் அடிப்படையில் சோதனை நடத்தப்பட்டது என்பதை அமலாக்கத் துறை தெரிவிக்கவில்லை. அமலாக்கத் துறை வெளியிட்ட அறிக்கையில் கூறியது போல, ஒரு ரூபாய் கூட கைப்பற்றப்படவில்லை" என வாதிடப்பட்டது.

தமிழக அரசுத் தரப்பில், "அமலாக்கத் துறை எப்போதும் வெளிப்படையாக இருந்ததில்லை. வெளிப்படையாக இருப்பதாக ஒரு பிம்பத்தை உருவாக்கி அதன் பின்னால் அமலாக்கத் துறை ஒளிந்து கொண்டுள்ளது. அமலாக்கத் துறையின் நடவடிக்கையால் நேரடியாக டாஸ்மாக்கின் நற்பெயருக்கும், மறைமுகமாக அரசின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது. 2007ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை முறைகேடு நடந்ததாகக் கூறப்படும் நிலையில், தற்போது தான் ஞானம் வந்தது போல விசாரணை நடத்துவது ஏன்?

அமலாக்கத் துறையின் நடவடிக்கை கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது. டாஸ்மாக்கில் முறைகேடு நடந்திருந்தால் மாநில அரசு நடவடிக்கை எடுக்கும். அமலாக்கத் துறையின் சோதனை நடந்து கொண்டிருந்த போதே, டாஸ்மாக்கில் ஆயிரம் கோடி ரூபாய் மோசடி என ஒரு தேசிய கட்சியின் மாநிலத் தலைவர் பேட்டியளித்தார். அதற்கு என்ன அர்த்தம்" எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

அமலாக்கத் துறை தரப்பில், "மாநில காவல் துறை மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை பதிவு செய்த வழக்குகளின் அடிப்படையிலேயே அமலாக்கத் துறை வழக்குப் பதிவு செய்தது. முறைகேடு நடந்திருப்பதாக கருதினால் அமலாக்கத் துறை விசாரணை நடத்தலாம். டாஸ்மாக் ஊழியர்கள் லஞ்சம் வாங்கியதாக முதல் தகவல் அறிக்கையில் உள்ளது. டாஸ்மாக் முறைகேடு மூலம் 1,000 கோடி ரூபாய்க்கு மேல் சட்டவிரோத பணப் பரிமாற்றம் நடந்தது சோதனையில் தெரியவந்துள்ளது. டாஸ்மாக் அதிகாரிகள் எவரும் துன்புறுத்தப்படவில்லை. மனித உரிமை மீறலிலும் ஈடுபடவில்லை" என வாதிடப்பட்டது.

அரசியல் பழிவாங்கும் நோக்கு, அரசியல் உள்நோக்கம் என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து நீதிமன்றம் விசாரிக்க முடியாது அது நீதிமன்றத்தின் வேலையும் அல்ல. ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தால் மற்றொரு கட்சி ஆளுங்கட்சி மீது குற்றச்சாட்டு கூறுவது வழக்கமானதுதான். ஆனால் நீதிமன்றம் ஆதாரங்களின் அடிப்படையில் நீதியை உறுதி செய்யவே முடியும் எனக் கூறி, தமிழக அரசும் டாஸ்மாக் நிர்வாகமும் தாக்கல் செய்த வழக்குகளை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். மேலும், அமலாக்கத் துறை சட்டப்படி தொடர்ந்து விசாரணை நடத்த அனுமதி அளித்தும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## தென்காசியில் மாவட்ட ஜாக்டோ ஜியோ சார்பில் கோரிக்கை பேரணி



தென்காசி. ஏப் 24

தென்காசி மாவட்ட ஜாக்டோ ஜியோ சார்பில் ஆசிரியர்கள்,அரசு ஊழியர்கள், அரசு பணியாளர்கள் பங்கேற்ற வாழ்வாதார கோரிக்கை பேரணி நடைபெற்றது.

தென்காசியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு தென்காசி மாவட்ட ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர் சண்முக சுந்தரம் தலைமை தாங்கினார் ஜாக்டோ ஜியோ அமைப்பின் நிர்வாகிகள் பிச்சைக்கனி , கோபி, முருகேஷ், ராஜேந்திரன், ஆரோக்கியராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் மாடசாமி துவக்க உரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன், மாவட்ட செயலாளர் இளங்கோ, கணினி ஆசிரியர் கூட்டணியின் மாநில தலைவர் ஜெபக்குமார். மாநிலபொது செயலாளர் மார்த்தாண்டபூபதி, நேரடி நியமனம் பெற்ற முதுகலை ஆசிரியர் அமைப்பின் ஜெய்சங்கர், மண்டல ஜெயளாளர் சேகர், பிச்சு மணி, செவிலியர் சங்கத்தை சேர்ந்த மோனிக்கா. மாவட்ட கூட்டுறவு ஊழியர் சங்க தலைவர் ராஜ் ,தமிழ் நாடு முதுகலை ஆசிரியர் கழகத்தின் தலைவர் காளிராஜ், மற்றும் மூட்டா மண்டல பொறுப்பாளர் பேராசிரியை இசக்கியம்மாள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

முன்னதாக வாழ்வாதார கோரிக்கை பேரணி தென்காசி உழவர் சந்தையில் தொடங்கி புதிய பேருந்து நிலையம் வரை நடைபெற்றது.இந்த பேரணியில் வாழ்வாதார பிரச்சனைகளான பழைய ஒய்வூதியம் , சரண் விடுப்பு,பள்ளி கல்வி துறையின் அரசாணை 243 ரத்து, அரசு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல்,அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் 21 மாத ஊதிய நிலுவைத் தொகைவழகுதல், அரசு துறைகளில் தனியார் மூலம் பணியாளர்களை தேர்வு செய்யும் முறையினை கைவிடுவது தொடர்பான கோரிக்கைகள் கோஷங்களாக எழுப்பப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் முடிவில் ஜாக்டோ ஜியோவின் நிதி காப்பாளர் சதிஷ் குமார் அனைவருக்கும் நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தென்காசி மாவட்ட ஜாக்டோ ஜியோ அமைப்பின் நிர்வாகிகள் செய்திருந்தனர்.



மதுரை மாநகராட்சி அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோவில் சுற்றியுள்ள நான்கு சித்திரை வீதிகளில் சேரும் குப்பைகளை எளிதில் அகற்றிட மாநகராட்சியின் சார்பில் (பசுமை மாறா) மூங்கில் குப்பைக் கூடைகள் வைக்கப்பட்டுள்ளது.

## காளையார்கோவில் கீழக்கோட்டையில் உலக புத்தகத் தினம்

காளையார் கோவில் ஏப்24



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க காளையார்கோவில் கிளை சார்பாக உலக புத்தகத் தினவிழா கொண்டாடப்பட்டது. மாணவர்களுக்கு புத்தகம் வழங்கப்பட்டு புத்தக வாசிப்பு நடைபெற்றது. பள்ளியில் உள்ள நூலக புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மாணவர்கள் ஆர்வமுடன் புத்தகங்களை தேர்ந்தெடுத்து வாசித்து மகிழ்ந்தனர். அதிக புத்தகத் தலைப்புகளை கூறிய மாணவி காவியாவிற்கு புத்தகப்பரிசுகள் வழங்கப் பட்டது. தலைமையாசிரியர் தெய்வானை தலைமை வகித்தார். ஆசிரியை வாசுகி முன்னிலை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கி யசாமி உலகப் புகழ்பெற்ற நாடக ஆசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்த நாளும் நினைவுநாளுமாகிய இந்தநாளில் அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் தொடங்கிய உலக புத்தக தினக் கொண்டாட்டம் ஆண்டுதோறும் ஏப்ரல் 23ஆம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. 2025 ஆம் ஆண்டு உலக புத்தக தினத்திற்கான கருப்பொருளாக உங்கள் வழியைப் படியுங் கள் என்பதாகும். இந்த கருப்பொருள் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தங்கள் சொந்த வார்த்தை களில் வாசிப்பை கண்டறிய ஊக்குவிக்கிறது. மகிழ்ச்சிக் காக வாசிப்பதற்கான ஆர்வத்தை வளர்கிறது. இது வாசிப்பு அனுபவத்தை தனிப் பயனாக்குவதையும் ஆர்வங்களுக்கு ஏற்ப அதைவடிவமைப்பதையும் வலியுறுத்து கிறது என்று விளக்கி கூறினார். ஆசிரியை கமலம்பாய் நன்றி கூறினார்.

## சிவியர் உறவின்முறை பாத்தியப்பட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில் உற்சவ விழா

தேனி.ஏப் 24



தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சண்முகசுந்தரபுரம் அமைந்துள்ள சிவியர் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் உற்சவ விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக காலை 6 மணிக்கு மேல் வேட்டவராயன் கோவில் இருந்து நகர் வலமாக அம்மனுக்கு காவடி எடுத்தும், பால்குடம் எடுத்தும் அவர்களது நேர்த்திக் கடனை நிறைவேற்றினர் அதனைத் தொடர்ந்து மாலை 3 மணிக்கு மேல் அம்மனுக்கு பொங்கல் வைத்தனர் மற்றும் ஐந்து மணிக்கு மேல் குத்துவிளக்கு பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்த சிவியர் உறவின்முறை எஸ். எஸ். புரம் தலைவர் மற்றும் நிர்வாகஸ்தர்கள், வாகன ஓட்டுனர் நல சங்கம், எலக்ட்ரிஷன் நலச்சங்கம், மாதர் சங்கம், மீனவர் நலச்சங்கம், பெயிண்டர் நலச்சங்கம் மற்றும் சிவியர் வாலிபர் முன்னேற்ற சங்கம் மற்றும் பக்த கோடிகளும் திரளாக கலந்து கொண்டு அம்மனின் அருள் ஆசி பெற்றுச் சென்றனர்.

## எஸ்.புதூர் ஒன்றியத்திற்குட்பட்ட கே.உரத்துபட்டி கிராமத்தில் புகைப்படக் கண்காட்சி

எஸ்.புதூர் ஏப்24



சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கே.உரத்துபட்டி கிராமத்தில் நேற்றைய தினம் (23.04.2025) செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன.

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது. புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இது போன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.

## மதுரை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் பெட்ரோல் ஸ்கூட்டர்கள் பெற்று பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி







மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக தமிழ்நாடு அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாதாந்திர உதவித்தொகை, உதவி உபகரணங்கள், சுயதொழில் தொடங்க அரசு மானியத்துடன் கூடிய கடனுதவி, வேலைவாய்ப்பு முகாம்கள், இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் கூட்டர்கள் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களுக்கெல்லாம் மகுடம் வைப்பது போல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின் குரல், உள்ளாட்சி அமைப்புகளில் ஒலிக்க வேண்டுமென்ற நோக்கில் தமிழகத்தில் உள்ள அனைத்து வகை உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கிடும் சட்ட மசோதாவை சட்டமன்றத்தில் நிறைவேற்றி உள்ளார்கள்.

மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் மிகவும் சிறப்பு வாய்ந்த திட்டமாக விளங்குகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் பெட்ரோல் ஸ்கூட்டர், அவர்கள் தங்கள் இல்லத்திலிருந்து வெளியே சென்று வேலைக்கு செல்வதற்கும், படிப்பதற்கும், மற்றும் தேவையான பிற பணிகளைச் செய்வதற்கும் பிறர் உதவியை எதிர்பாராமல் வசதியான மற்றும் சுதந்திரமான போக்குவரத்து முறையாக உதவுகிறது.

நான் தினந்தோறும் நீச்சல் பயிற்சி பெறுவதற்காக வெகு தொலைவு செல்ல வேண்டியதால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிவந்தேன். ஆரம்பத்தில் இயற்கையிலேயே போலியாவினால் பாதிக்கப்பட்ட மாற்றுதிறன் கொண்டவர்களுக்கு மட்டுமே பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எதிர்பாராத விபத்துகளின் மூலம் கால்களை இழந்தவர்களுக்கும் பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்க வேண்டும் என்று அறிவித்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து, மாற்றுதிறனாளிகள் நலத்துறையின் மூலம் வழங்கப்படும் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் பெற விண்ணப்பித்தேன். தகுதியின் அடிப்படையில் எனக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டது.

பெட்ரோல் ஸ்கூட்டர் உள்ளதால் இப்போது நான் நீச்சல் பயிற்சி பெறும் இடத்திற்கு தினந்தோறும் சிரமமின்றி சென்று வரவும், நினைத்த இடத்திற்கு சென்று வரவும் எளிதாக உள்ளது. மாற்றித்திறன் கொண்டவர்களின் நலனை கருத்திற்கொண்டு இத்திட்டத்தினை செயல்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை என்னுடைய சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் பெற்று பயனடைந்த ராஜாக்கூர் குடியிருப்பு பகுதியில் வசித்து வரும் திருமதி.பிரியா அவர்கள் தெரிவித்ததாவது:

என் நான் மதுரை ராஜாக்கூர் குடியிருப்பு பகுதியில் வசித்து வருகிறேன். ஆரம்ப காலகட்டத்தில் இரண்டு கால்களை இழந்தவர்களுக்கு மட்டுமே இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒரு காலினை இழந்தவர்களுக்கும் பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்க வேண்டும் என்று அறிவித்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து, மாற்றுதிறனாளிகள் நலத்துறையின் மூலம் வழங்கப்படும் பெட்ரோல் ஸ்கூட்டர் பெற விண்ணப்பித்தேன். தகுதியின் அடிப்படையில் எனக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டது. முன்பெல்லாம் என்னால் வீட்டை விட்டே வெளியே வர இயலாமல் மிகுந்த சிரமத்துடன் வீட்டிற்குள்ளேயே இருந்தேன். தற்போது, பெட்ரோல் ஸ்கூட்டர் இருப்பதால் நான் வேலைக்கு சென்று சம்பாதித்து வருகிறேன். இதன் மூலம் எங்கள் குடும்ப வாழ்வாதாரமும் சீரான நிலையில் உள்ளது. மாற்றித்திறன் கொண்டவர்களின் நலனை கருத்திற் கொண்டு இத்திட்டத்தினை செயல்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு

இ.சாலி தளபதி எம்.ஏ.,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.

ம.கயிலைச் செல்வம், பி.இ.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி), மதுரை.

## சிவகங்கை மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சியர்

சிவகங்கை ஏப்24



சிவகங்கை மாவட்டம் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் உயிர்ப்பதிவேட்டில் காத்திருக்கும் இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.முறையாக பள்ளியில் பயின்று ஒன்பதாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று பத்தாம் வகுப்பில் தோல்வியுற்றவர்களுக்கு மாதம் ரூ.200/ம், 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300/ம், பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.400/ம், பட்டதாரிகளுக்கு (ஙிணி போன்ற தொழில்சார் பட்டப்படிப்பு தவிர) மாதம் ரூ.600/ வீதம் 3 ஆண்டுகளுக்கு வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை நேரடியாக மனுதார்களது வங்கி கணக்கில் காலாண்டுக்கொருமுறை வரவு வைக்கப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் இளைஞர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தங்களின் கல்வித்தகுதிகளை பதிவு செய்து 5 ஆண்டுகள் நிறைவு செய்திருக்க வேண்டும். தொடர்ந்து பதிவினை புதுப்பித்து இருக்க வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 45 வயதுக்கு மிகாமலும், ஏனையோர் 40 வயதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். மனுதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000 (எழுபத்தி இரண்டாயிரத்திற்கு) மிகாமல் இருத்தல் வேண்டும்.

அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பயிலும் மாணவ/மாணவியருக்கு இவ்வுதவித் தொகை வழங்கப்பட மாட்டாது. எனினும், தொலைதூரக் கல்வி அல்லது அஞ்சல் வழி மூலம் கல்வி கற்பவர்கள் உதவித் தொகை பெறலாம்.

இந்த உதவித் தொகை பெறுவதற்கு மேற்காணும் தகுதிகள் உள்ளவர்கள் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு அனைத்துக் கல்விச் சான்றுகள், வேலைவாய்ப்பு அடையாள அட்டை ஆகியவற்றுடன் நேரில் வந்து இலவசமாக விண்ணப்பம் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் அனைத்து வேலை நாட்களிலும் வருடம் முழுவதும் வழங்கப்படும். மேலும், உதவித்தொகை பெறுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு ரத்து செய்யப்பட மாட்டாது எனவும் உதவித்தொகை பெறுவதால் வேலைவாய்ப்பு பரிந்துரைத்தலுக்கு எவ்வித தடையும் ஏற்படாது.

எனவே, இத்திட்டத்தின் கீழ் இதுவரை உதவித் தொகை பெறாத தகுதியான இளைஞர்கள் விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்தி செய்து விண்ணபத்தை அலுவலகத்தில் வேலை நாட்களில் நேரில் சமர்ப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.




## பொது அறிவிப்பு



கண்டவராயன்பட்டி ஸ்ரீ கிணத்தடிகாளியம்மன் கோவில் பரம்பரை அறங்காவலர்கள் மற்றும் பூசாரிகள் கண்டவராயன்பட்டி ஸ்ரீ கிணத்தடி காளியம்மன் கோவில் பூத்திருவிழா பால்குடம் தொண்டு தொற்று வைகாசி மாதம் முதல் வாரம் ஞாயிறு திங்கள் இரண்டு நாட்கள் பரம்பரை அறங்காவலர் மற்றும் பூசாரிகள் பொதுமக்களால் நடத்தப்பட்டு வருகிறது அதன்படி இந்த ஆண்டு 18. 5. 2025 ஞாயிறு மற்றும் 19. 5 .2025 திங்கட்கிழமை பூத்திருவிழா பால்குடம் நடத்த ஏற்பாடு நடந்து கொண்டு இருக்கும் நிலையில் கண்டவராயன்பட்டி நகரத்தார்களும் கீழச்சிவல்பட்டி நகரத்தாரர்களும் ஸ்ரீ கிணத்தடி காளியம்மன் கோவில் எங்கள் இடத்தில் உள்ளதாக நில அளவைக்கு பணம் கட்டி 22 .4. 2025 மதியம் ஒரு மணி அளவில் கோவில் இடம் அளவு செய்தனர் அதன்படி கோவில் இடம் அரசு கணக்குப்படி அரசு இடத்தில் உள்ளதாக அரசு அதிகாரிகள் தெரிவித்தார்கள் அதனைத் தொடர்ந்து கண்டவராயன்பட்டி நகரத்தார்களும் கீழச்சிவல்பட்டி நகரத்தார்களும் கோவில் முன்பாக உள்ள இடம் எங்கள் பட்டாவில் உள்ளது அதனால் கோவில் முன்பாக சன்னதியை முற்றிலும் மறைத்து எங்கள் இடத்தில் தடுப்பு சுவர் கட்டுவதாக கூறி சென்று விட்டார்கள் மேலும் கடந்த மாதம் கோவில் பரம்பரை அறங்காவலர்களாகிய பூசாரிகள் மீது ஸ்ரீ கிணத்தடி காளியம்மன்கோவில் உள்ள இடம் எங்களுடையது என்று ஆன்லைன்புகார் மனு கொடுத்துள்ளார்கள் என்ற விபரத்தை பொதுமக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கிறோம் மேலும் திருவிழா நடத்துவதற்கு பரம்பரை அறங்காவலர் மற்றும் பூசாரிகள் தவிர்த்து யாரும் கோவில் பெயரை சொல்லி பணம் வசூல் செய்ய கூடாது என்ற தகவலையும் அவ்வாறு கோவில் பெயரைச் சொல்லி பணம் வசூலிப்பவர்கள் மீது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த பொது அறிவிப்பின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்

இப்படிக்கு

ஸ்ரீ கிணத்தடி காளியம்மன் கோவில் பரம்பரை
அறங்காவலர்கள் மற்றும் பூசாரிகள் கண்டவராயன்பட்டி.



காஷ்மீரில் நடந்த பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைக் கருத்தில் கொண்டு, பிரதமர் நரேந்திர மோடி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உடன் அவசர ஆலோசனை மேற்கொண்டார். டெல்லியில் காலையிலேயே கூடிய இக்கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் துறை சார்ந்த உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். பயங்கரவாதிகள் நேற்று நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

## வேலூர் அடுத்த புத்தூர் ஊராட்சி ஏரியில் கனிமவளக் கொள்ளை கனிம வள கொள்ளை குறித்து ஊர் பொதுமக்கள் கொந்தளிப்பு..

வேலூர் ஏப்24



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, புத்தூர் ஊராட்சி, புத்தூர் ஏரி, பொதுப்பணித் துறைக்கு சொந்தமான ஏரியில், இதனை கேட்டோம் என்றால் தொடர்ந்து மண்பாண்டத்திற்கு மண் எடுக்கப்படுகிறது. இதற்கு மாவட்ட ஆட்சியர் அனுமதி கொடுத்துள்ளார்கள் என பித்தலாட்டங்கள் செய்துராட்சத அதிநவீன இயந்திரங்கள் மூலம் நூற்றுக்கணக்கான டிப்பர் லாரிகளில் அதிவேகமாக கனிம வள கொள்ளையடித்து வருகின்றனர். இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி நிலத்தடி நீர்மட்டத்தால் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். இதற்கு தாசில்தார் மற்றும் சம்பந்தப்பட்ட துறை நிர்வாகம் உட்பட கையூட்டு பெற்றுக் கொண்டு அதிகாரத்தை பயன்படுத்தாமல் வேடிக்கை பார்த்து வருவதாக தொடர் குற்றச்சாட்டு. இதுகுறித்து பலமுறை துறை சார்ந்த உயர் பதவி ஊழியர்களுக்கு புகார் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றனர் என இந்த ஊர் மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அடுக்கடுக்காக புகார்கள் தெரிவித்து வருகின்றனர். மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நிர்வாகம் தலையிட்டு உடனடியாக கனிம வளத்தை பாதுகாக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் பொய்கை சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

## வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் கோடைகால இலவச விளையாட்டு பயிற்சி முகாம்!!

வேலூர் ஏப்24




வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, புகழ்பெற்ற வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில், உடற்கல்வி துறை சார்பில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கோடை காலத்தில் இலவச விளையாட்டு பயிற்சி ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. இதன் அடிப்படையில் இந்த ஆண்டும், 19 ஆம் ஆண்டு கோடைகால இலவச விளையாட்டு பயிற்சி முகாம் வருகின்ற 26 ஆம் தேதி தொடங்கி மே மாதம் வரை நடக்க உள்ளது. இப்பயிற்சி முகாமில் தடகளம், கூடைப்பந்து, சதுரங்கம், கைப்பந்து கால்பந்து, வளைகோல் பந்து, கராத்தே, எரிபந்து மற்றும் யோகாசனம் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி முகாமில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகள் கலந்து கொள்ளலாம். பயிற்சி முகாமில் சேர எவ்வித கட்டணமும் கிடையாது. சிறந்த பயிற்சியாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளிக்கின்றனர். இப்பயிற்சி தினமும் காலை ஆறு முப்பது மணிக்கு தொடங்குகிறது பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியர்களுக்கு காட்பாடி சித்தூர் தாராபடவேடு பேருந்து நிலையத்திலிருந்து இலவச பேருந்து வசதி ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. இந்த பயிற்சி 26 ஆம் தேதி காலை 6:30 மணிக்கு வி ஐ டி பல்கலைக்கழக விளையாட்டு பயிற்சி தொடக்க விழா நடைபெறுகிறது என வி.ஐ.டி பல்கலைக்கழக வேந்தர் டாக்டர். ஜி.விஸ்வநாதன் இவ்வறிவிப்பினை வெளி யிட்டுள்ளார்.

## பெரியகுளம் அருகே தென்கரை பேரூர் கழகம் அஇஅதிமுக சார்பில் பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம்



பெரியகுளம் ஏப்24

தேனிமாவட்டம் பெரியகுளம் அருகே கள்ளிப்பட்டி,கைலாச பட்டி பகுதியில் தென்கரை பேரூர் அஇஅதிமுக சார்பில் பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம் தென்கரை பேரூர் கழக செயலாளர் ஆண்டவர் தலைமையில் நடைபெற்றது. பெரியகுளம் ஒன்றிய செயலாளர்கள் அன்னபிரகாஷ்,ராஜகுரு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கொள்கை பரப்பு துணைச் செயலாளரும்,தேனி கிழக்கு மாவட்ட தேர்தல் பொறுப்பாளருமான ரதிமீனா சேகர்,தேனி கிழக்கு மாவட்ட செயலாளர் முறுக்கோடை ராமர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பூத் கமிட்டி பொறுப் பாளர்களுக்கு ஆலோசனை வழங்கினர். மேலும் பூத் கமிட்டி பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்ட நாளிலிருந்து சுறுசுறுப்புடன் விழிப்புணர்வோடு தேர்தல் களப்பணியாற்றி முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியை மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சராக வெற்றி பெற அனைவரும் பாடுபட வேண்டும் என்று அறிவுறுத்தினர். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி,மாவட்ட இலக்கிய அணி செயலாளர் தவமணி,இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கழகத்தின் போர்வாள் அப்பாஸ் மைதீன்,மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் ராம தண்டபாணி, மாவட்ட மகளிர் அணி இணை செயலாளர்கள் பாப்பா இளமுருகன்,சித்ரா கலா, ஒன்றிய துணைச் செயலாளர் செல்லப்பாண்டி,ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர்களும் முருகேசன்,தென்கரை பேரூர் கழக அவை தலைவர் ராஜாமணி,இணைச்செயலாளர் பஞ்சம்மாள், துணைச் செயலாளர்கள் நாச்சம்மாள், முருகன்,மாவட்ட அண்ணா தொழிற்சங்க பேரவை துணைச் செயலாளர் கல்லு போத் குமார்,வார்டு கழக செயலாளர்கள் ராஜ், சுகுமார், பெரியசாமி,அறிவழகன்,

சங்கர்,கார்த்திக்,வார்டு பிரதி நிதிகள் கண்ணன்,முத்துமணி, பூங்கொடி,பஞ்சவர்ணம், லதா உள்பட சார்பு அணி நிர்வாகிகள், பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்..

## கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் அன்று உள்ளூர் விடுமுறை



மதுரை, ஏப்.24

மதுரை மாநகரில் 12.05.2025 (திங்கள்கிழமை)அன்று அருள்மிகு கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளவிருப்பதால், அன்றைய தினம் மதுரை மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை தினமாக அறிவிக்கப்படுகிறது. ஜுன் 2025 மாதத்தில் 14ஆம் தேதி (14.06.2025சனிக்கிழமை) விடுமுறை தினத்தை வேலை தினமாக ஈடு செய்யப்படும். 12.05.2025 அன்று மாவட்டத்தில் உள்ள கருவூலங்களும், சார்நிலை கருவூலங்களும், வங்கிகளும் அவசர அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா, தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் அறிவியல் பூர்வமான விளையாட்டு பயிற்சி

தேனி, ஏப்.24



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப, அறிவியல் பூர்வமான விளையாட்டு பயிற்சி, தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய விளையாட்டு விடுதிகள் 28 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

இவ்விளையாட்டு விடுதி சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவம் www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் வெளி யிடப்பட்டுள்ளது, விளையாட்டு விடுதியில் சேர விருப்பமுள்ள 7, 8, 9 மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள்இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

தனி நபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் விண்ணப்பிப்பவர்கள் மாவட்ட, மாநில அளவில் குடியரசு / பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் / அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டுக் கழகங்கள் நடத்தும் போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும் (அல்லது) தமிழ்நாடு அணியில் தேர்வு செய்யப்பட்டு தேசிய அளவில் தேசிய விளையாட்டு சம்மேளனங்கள் / இந்திய பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பு (SGFI) / இந்திய விளையாட்டு அமைச்சகம் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களும், பன்னாட்டு அளவில் அங்கீகாரம் பெற்ற போட்டிகளில் பதங்கங்கள் பெற்றவர்களும் மற்றும் கலந்து கொண்டவர்களும் மாவட்ட, மாநில அளவில் முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம். கூடுதல் தகவல்களுக்கு 95140 00777 என்ற ஆடுகள தகவல் தொடர்பு மைய அலைப்பேசியினை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங்,தெரிவித்துள்ளார்கள்.

## கல்லல் துளிர் இல்லங்களில் உலக பூமி தின விழா

கல்லல் ஏப்24



சிவகங்கை மாவட்டம் கல்லில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் கல்லல் கிளையில் செயல்பட்டு வரும் விக்ரம் சாராபாய், சர் சி வி ராமன் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி துளிர் இல்லங்களில் உலக பூமி தின விழா கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட பொருளாளர் பிரபு தலைமையேற்று அறிவியல் இயக்க பாடலைப் பாடியதுடன் சூரிய மண்டலத்தில் உள்ள பூமியின் முக்கியத்துவத்தைப் பற்றி மாணவர்கள் மத்தியில் எடுத்துரைத்தார். மேலும், சுமார் 30 மாணவ மாணவிகளுடன் பூமிக்கு ஏற்படும் பல்வேறு அச்சுறுத்தல்கள் பற்றியும், பூமியைக் காக்க நாம் எடுக்க வேண்டிய துரித நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடினார். மாணவர்கள் உற்சாகமாக கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்தார். தங்கள் வீட்டு சுற்றுப்புறங்களில் மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பதாக மாணவர்கள் உறுதி அளித்தனர். உலக புத்தக தினத்தை முன்னிட்டு துளிர் இல்ல பொறுப்பாளர் நாகரத்தினம் புத்தகங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி மாணவர்கள் மத்தியில் விளக்கி கூறினார். சில சிறுகதைகளைப் பற்றி பேசிய அவர் ஒவ்வொரு கதையும் உணர்த்தும் நீதியையும் அவர்கள் புரியும் வண்ணம் விளக்கி கூறினார். மாணவர்கள் சிறிது நேரம் புத்தக வாசிப்பையும் மேற்கொண்டனர். மற்றொரு துளிர் இல்ல பொறுப்பாளர் சித்திரை செல்வி அலைபேசியினால் ஏற்படும் ஆபத்துகளையும் புத்தக வாசிப்பு எவ்வாறு அதைப் போக்கும் என்பதைப் பற்றி எளிமையாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியின் நிறைவாக துளிர் இல்லத்திலிருந்து தமிழ்நாடு அறிவியல் இயக்கம் நடத்திய துளிர் திறனறிதல் தேர்வில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழும், இந்த மாதத்திற்கான துளிர் மாத இதழும் வழங்கப்பட்டது. இவ்விழாவில் அறிவியல் இயக்க உறுப்பினர் ரமணா உட்பட திரளான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## தண்ணீர் சிக்கனம் தேவை இக்கணம் கல்லூரி ஆண்டு விழாவில் கடையநல்லூர் நகர மன்ற தலைவர் பேச்சு

தென்காசி ஏப் 24.



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டு விழாவில் மாணவ மாணவிகளிடம் குடிநீர் சிக்கனம் தேவை இக்கணம் என்ற தலைப்பில் கடையநல்லூர் நகர மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபிபூர் ரகுமான் அவர்கள் உரையாற்றினார் இது பற்றிய விபரமாவது கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 13ம் ஆண்டு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது விழாவிற்கு கல்லூரி முதல்வர் திருமதி முனைவர் விக்டோரியா தங்கம் தலைமை தாங்கினார் மாணவ மாணவிகளின் பாட்டு நடனம் மற்றும் பல்வேறு போட்டிகள் நடைபெற்றது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியின் முன்னாள் விலங்கியல் துறை தலைவர் சோழவன் சிறப்புரை ஆற்றினார் விழா நிகழ்ச்சிகளை கல்லூரி ஆங்கிலத் துறை தலைவர் ராம் சங்கர் ஒருங்கிணைத்தார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவமாணவிகளுக்கு பரிசு பாராட்டு சான்றிதழ் வழங்கி சிறப்புரையாற்றிய கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான் அவர்கள் தனது உரையில் உலகில் மூன்றாம் உலகப்போர் ஏற்பட்டால் அதற்கு தண்ணீர் தான் காரணம் எனக்கூறி பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் கல்லூரி மாணவ மாணவி கள் தங்களை சுற்றி உள்ளவர் களிடம் குடிநீர் சிக்கனம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என கூறி சிறப்பு உரையாற்றினார் அவர் மாணவர்களிடையே பேசியதாவது

தண்ணீர் சிக்கனம் தேவை இக்கணம். நாம் உயிர் வாழ்வதற்கு தண்ணீர் மிகவும் அத்தியாவசியமானது. சுகாதாரமான உலகிற்கு சுத்தமான குடிநீர் எனும் நோக்கத்தோடு 2010ம் ஆண்டு முதல் சர்வதேச தண்ணீர் தினமாக மார்ச் 22ந்தேதி கடைபிடிக்கப்பட்டது

இந்தியாவில் கிடைக்கும் தண்ணீரை சரியாக பயன்படுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. கடலில் கலக்கும் நீரின் அளவு மிக அதிகம். இந்திய நதிகள் உலக நதிகளின் நீர் அளவில் 4 சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ளன. தமிழ்நாட்டில் நிலத்துக்குமேல் கிடைக்கும் நீரில் சுமார் 30 சதவீதத்துக்கு நாம் அண்டை மாநிலங்களை சார்ந்திருக்கிறோம். பக்கத்து மாநிலங்களிலும் உபரிநீர் அதிகம் இல்லை. ஏற்கனவே நிலத்துக்குமேல் கிடைக்கும் நீரில் 95 சதவீதத்தையும், நிலத்துக்கு கீழ் கிடைக்கும் நீரில் 80 சதவீதத்தையும் வருடந்தோறும் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம்.

தமிழகம் நகரமயமாகும் போது தண்ணீரின் தேவையும் அதிகமாகிறது. எனவே இருக்கும் நீர் ஆதாரங்களை அழியாமல் நாம் காத்துக்கொள்ள வேண்டும். தண்ணீரை கவனமாக பயன்படுத்த வேண்டிய அதைவிட அவசியம். பல்வேறு தொழிற்சாலைகள் பூமியை பல ஆயிரம் அடிக்கு துளையிட்டு வரைமுறை யில்லாமல் தண்ணீரை உறிஞ் சுகின்றன. அதை கட்டுப்படுத்த யாரும் முன்வருவது இல்லை. மழைக்காலங்களில் வீணாகும் மழைநீரை சேமிக்கும் திட்டத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டும். அவ்வப்போது அந்த திட்டத்தை நடைமுறை படுத்தாமல் முறையாக அமல்படுத்த உள்ளாட்சி அமைப்புகள் முன்வரவேண்டும்.

அறிவார்ந்த உலகம் தண்ணீர் பிரச்சினை குறித்து வருமுன் காக்க தவறினால் நகரங்களில் வீட்டுவாடகைவிட தண்ணீருக்கு அதிக பணம் செலவு செய்ய வேண்டும். சமீபகாலமாக மருத்துவத்திற்கும், தண்ணீருக்கும் ஒவ்வொரு குடும்பமும் செய்யும் செலவு அதிகரித்து வருவதை கண்கூடாக காண்கிறோம். ஆனால் தண்ணீரை சேமிக்கவும், சிக்கனமாக பயன்படுத்தவும் யாரும் முன்வருவது இல்லை. இதே நிலை நீடித்தால் தண்ணீர் பிரச்சினைக்காக பல போராட்டங்களை சந்திக்க வேண்டிவரும். எனவே வருங்கால சந்ததியினருக்கு குடிநீர் பிரச்சினை என்பது ஏற்படாத வகையில் நீர் ஆதாரத்தை பெருக்குவதற்கு தேவையான நிதிகளை ஒதுக்கீடு செய்து கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். பொதுமக்களிடம் தண்ணீர் தேவை குறித்தும், அதனை பெருக்குவதற்கும் விழிப்புணர்வை மாணவ சமுதாயத்தினர் ஏற்படுத்த வேண்டும். என்று கூறினார் கல்லூரி விழா நிகழ்ச்சிகளை தொடர் கல்வி இயக்குனர் துறை தலைவர்கள் அலுவலக பணியாளர்கள் மற்றும் மாணவ மாணவிகள் மிகச் சிறப்பாக செய்திருந்தனர் இறுதியில் மாட்டுடன் ஆண்டு விழா நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

# கம்பத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்க சந்திப்பு



கம்பம் .ஏப்,24:

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் கம்பம் சந்திப்பு 20வது நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. நிகழ்விற்கு மாநில செயற்குழு உறுப்பினர், எழுத்தாளர் தேனி சுந்தர் தலைமை வகித்தார். ஆசிரியர் செந்தில் குமார் வரவேற்றுப் பேசினார். கவிஞர் இதய நிலவன் எழுதிய "ஒரெண்டே ரெண்டே" நாவல் குறித்து ஆசிரியர், கிளை பொருளாளர் கௌசல்யா, ரெய்ச்சல் கார்சன் எழுதிய உலகப் புகழ் பெற்ற சூழலியல் தொடர்பான நூலான "மௌன வசந்தம்" குறித்து கிளைச் செயலாளர் திலீபன் ஆகியோர் பேசினர்.

மாவட்ட செயலாளர் வெங்கட்ராமன் விவாதத்தை தொடங்கி வைத்துப் பேசினார். தொடர்ந்து நூல் குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. நூலாசிரியர் கவிஞர் இதய நிலவன் ஏற்புரை வழங்கினார். எழுத்தாளர் இராஜிலா ரிஸ்வான், மணியரசன் உட்பட அறிவியல் இயக்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். செயற்குழு உறுப்பினர் நித்தியானந்தன் நன்றி கூறினார்.





மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்க பொருள்காட்சி துணை மேயர் நாகராஜன் வடக்கு மண்டல தலைவி சரவண பவனேஸ்வரி குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர் உடன் தலைவர் ஜெகதீசன் கண் பொருள்காட்சி தலைவர் வரதராஜன் செயலாளர் ஸ்ரீதர் துணைத்தலைவர்கள் நிப்பான் தனுஷ்கோடி செல்வம் மற்றும் நிர்வாகிகள் உள்ளன

# மதுரை மத்திய சிறையில் உலக புத்தக தினம் விழா



மதுரை, ஏப்.24

மதுரை மத்திய சிறையில் உலக புத்தக தினத்தை முன்னிட்டு புத்தக திறனாய்வு முறைகள் மற்றும் படைப்பாற்றல் தொடர்பான சிறப்பு நிகழ்ச்சி மதுரை சரகம், சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை துணைத்தலைவர் ஆ. முருகேசன் வழிகாட்டுதலின்படி சிறைகண்காணிப்பாளர் மு.சதிஸ்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளரான முனைவர்.அ.ராமசுப்பையா முதல்வர் மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, புத்தகங்கள் எவ்வாறு ஒரு மனிதனின் வாழ்வை மடைமாற்றம் செய்கிறது என்பது குறித்து சிறப்புரை ஆற்றினார். அதனை தொடர்ந்து கு.சாமிதுரை உயர்நீதிமன்ற மதுரை கிளை மூத்த வழக்கறிஞர், அறிஞர்களின் வாழ்வில் புத்தகங்கள் ஏற்படுத்திய தாக்கத்தை பற்றி எடுத்துரைத்தார்.சே. முனியசாமி உதவி பேராசிரியர் மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, எழுத்திற்கும் படைப்பாற்றலுக்குமான இணைப்பே வாசிப்பு என்பதை எடுத்துரைத்தார்.தேவராஜ் அதிசயராஜ் தமிழ் ஆசிரியர் மற்றும் எழுத்தாளர், நூல் திறனாய்வு செய்யும் முறைகள் குறித்து விளக்கினார். இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறைவாசிகள் கலந்து கொண்டனர் மேலும் சிறைவாசிகள் தாங்கள் திறனாய்வு செய்யவிருக்கும் புத்தகங்களை எதிர்காலத்தில் படைப்புகளாக மாற்றி புத்தகங்கள் வெளியிடுவதற்கு இந்நிகழ்ச்சி ஓர் தொடக்கமாக அமைந்தது.

# மதுரை மாநகராட்சி "பசுமை நடைபயணம்" மாநகராட்சி பள்ளி ஆசிரியர்கள் கீழகுயில்குடி சமணர் படுகையை கண்டு களித்தனர்

மதுரை, ஏப்.24

மதுரை மாநகராட்சி சார்பில் மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் பசுமை நடைபயணமாக கீழகுயில்குடியில் உள்ள சமணர் படுகையை மதுரை மாநகராட்சி கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன் , கல்வி அலுவலர் ஜெய்சங்கர் ஆகியோர் முன்னிலையில் சென்று கண்டு களித்தார்கள்.

மேயர், ஆணையாளர் ஆகியோர் வழிகாட்டுதலின் கீழ் மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ. மாணவிகள் புத்தாக்கம் பெறுவதற்கு மாநகராட்சியின் சார்பில் விளையாட்டு போட்டிகள், மாவட்ட அளவில் மற்றும் மாநில நடைபெறும் பல்வேறு குறு விளையாட்டு போட்டிகள், உயர்கல்வி வழிகாட்டுதல், மற்றும் மேஜிக் ஷோ உள்ளிட்ட பல்வேறு புத்தாக்க பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு கோடை விடுமுறையை பயனுள்ளதாக பெறும் வகையில் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் பசுமை நடைபயணமாக (Green Walk) மதுரை மாவட்டத்தில் உள்ள கீழக்குயில்குடியில் உள்ள சமணர் படுகையை காண்பதற்கு மதுரை மாநகராட்சி சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

மதுரை மாநகராட்சி ஆரம்பபள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் சுமார் 170 மாணவ, மாணவியர்கள் மற்றும் 10 ஆசிரியர்கள் "பசுமை நடைபயணமாக" (Green Walk) இளங்கோ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியிலிருந்து கீழக்குயில்குடி சமணர் படுகைக்கு சென்று கண்டு களித்தார்கள்.

தொடர்ந்து மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களுக்கு தே.கல்லுப்பட்டி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் பொன்முடியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் "எண்ணும் எழுத்தும்" பயிற்சி 22.04.2025 முதல் 24.04.2025 வரை ஆகிய மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இப்பயிற்சியை மதுரை மாநகராட்சி கல்விக்குழுத் தலைவர் மற்றும் கல்வி அலுவலர் ஆகியோர் தொடங்கி வைத்து உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் கல்விக்குழுத் தலைவர்.ரவிச்சந்திரன், கல்வி அலுவலர்.ஜெய்சங்கர், கல்விப்பிரிவு கண்காணிப்பாளர் .வீரபாலமுருகன், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் .சௌந்தரராஜன், தலைமை ஆசிரியர்கள் .உமாமகேஸ்வரி, தனலெட்சமி, பள்ளி ஆசிரியர்கள், பள்ளி மேற்பார்வையாளர்கள், கல்விப்பிரிவு பணியாளர்கள் மாணவ, மாணவிகள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அலங்காநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உலக ஆய்வக நுட்புனர்கள் தின விழா









அலங்காநல்லூர், ஏப்.24

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உலக ஆய்வக நுட்புனர்கள் தினத்தையொட்டி அகில இந்திய மருத்துவ ஆய்வக நுட்புனர்கள் சங்கத்தின் சார்பில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது இவ்விழாவுக்கு வட்டார மருத்துவ அலுவலர் வளர்மதி, தலைமை தாங்கினார் மருத்துவர் அனுப்பிரியா, முன்னிலை வகித்தார். ஆய்வக நுட்புனர்கள் சங்க மாநிலத் தலைவர் மரியதாஸ், வரவேற்று பேசினார் விழாவில் ஆய்வக நுட்புனர்கள் அலுவலகப் பணியாளர்கள் முன்பாக மருத்துவ அலுவலர்கள் கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கினர். அதனைத் தொடர்ந்து காசநோயாளிகளுக்கு சத்துணவு பொருட்கள் வழங்கப்பட்டது. மருத்துவ மனையில் சிறப்பாக பணியாற்றிய லேப் டெக்னீசியன்களுக்கு கேடயங்களை வட்டார மருத்துவர் வளர்மதி, மற்றும் மருத்துவர் அனுப்பிரியா, இணைந்து வழங்கி வாழ்த்தினார். தொடர்ந்து மருத்துவமனை வளாகப் பகுதியில் மரக்கன்றுகள் நடப்பட்டு தண்ணீர் ஊற்றப்பட்டது நிகழ்ச்சியின் முடிவில் அகில இந்திய மருத்துவ ஆய்வக நுட்புனர்கள் சங்க செயலாளர் மேனில்பாபு, நன்றி கூறினார்.

# வாழையில் டிரைக்கோடெர்மா விரிடி பயன்பகத்தும் முறை குறித்து செயல்முறை விளக்கம்



சின்னமனூர், ஏப்.24

தேனி மாவட்டம் சின்னமனுரை ஒட்டிய அலகாபுரி கிராமத்தில், கிராம அனுபவப்பணி திட்டத்தின் கீழ் மதுரை வேளாண் அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவி சு.நம்ரதா விவசாயி பெருமாள் என்பவரின் வாழைத் தோட்டத்தில் டிரைக்கோடெர்மா விரிடி பயன்படுத்தும் முறை குறித்துச் செயல்முறை விளக்கம் அளித்தார்.உயிர் டிரைக்கோடெர்மா விரிடி என்பது டிரைக்கோடெர்மா விரிடி எனப்படும் பூசணம் கொண்ட ஓர் உயிரியல் பூஞ்சைக் கொல்லி ஆகும் 5 கிலோ டிரைக்கோடெர்மா விரிடி 5 டன் பண்ணை முற்ற எருவுடன் (யீஹ்னீ) கலந்து வயல் முழுவதும் சீராக விநியோகபடுத்துவதால் மண்ணின் ஆரோக்கியம் மேம்பட்டு, மேலும் பல்வேறு மண்ணால் பரவும் பூஞ்சை நோய்களும் கட்டுப்படுத்தப்படுகிறது.இவற்றை விவசாயிகளுக்கு எளிதில் புரியும் வகையில் மாணவி செய்முறை விளக்கம் அளித்தார்.

# திருப்பூரில் உயர் மின் கோபுர விளக்கு துவக்க விழா





திருப்பூர், ஏப்.24

திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்புராயன் தொகுதி நிதியின் மூலம் வார்டு எண் 32.18.14.25.10 24.ஆகிய 6, வார்டுகளில் ரூபாய் 33 லட்சம் மதிப்பீட்டில் கோபுர மின்விளக்குகள் திறப்பு விழா நிகழ்சசிகள் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவினை நாடாளுமன்ற உறுப்பினர் கே சுப்புராயன் திறப்பு விழா செய்து பொதுமக்களுக்கு அர்ப்பணித்து இனிப்புகளை வழங்கினார். விழாவில் மண்டல தலைவர்கள் தம்பி ஆர் கோவிந்தராஜ், உமா மகேஸ்வரி சிட்டி வெங்கடாசலம், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயற்குழு உறுப்பினர் ரவி, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மதிமுக மாநகர் மாவட்ட செயலாளர் அரிமா நாகராஜ் திமுக சார்பில் தாமோதரன். பிரேமலதா கோட்டா பாலு அதிமுக சகுந்தலா ஈஸ்வரன், திமுக விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் ரத்தினசாமி. 11 வது வார்டு கவுன்சிலர் செல்வராஜ், காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்ட செயலாளர் குரு மெடிக்கல் குருசாமி மற்றும் ஜே.இ சண்முகசுந்தரம், மாநகராட்சி நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்.





தேனி மாவட்டம், தேனிஅல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட மாடர்ன் மஹாலில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான தென்னை சாகுபடி கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தென்னை சாகுபடி விவசாயிகளுக்கான கையேட்டினை வெளியிட்டார்

# சிவகங்கையில் உலக புத்தக தினம் மற்றும் உலக காப்புரிமை தினம் தொடர்பான சட்ட விழிப்புணர்வு முகாம்





சிவகங்கை, ஏப்.24

சிவகங்கையில் உலக புத்தக தினம் மற்றும் உலக காப்புரிமை தினம் தொடர்பான சட்ட விழிப்புணர்வு முகாம் தலைவர்ஃமுதன்மை மாவட்ட நீதிபதி மு.அறிவொளி, தலைமையில் நடைபெற்றது. சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் காஞ்சிரங்கால் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் உலக புத்தக தினம் மற்றும் சட்ட விழிப்புணர்வு முகாம் மாண்புமிகு தலைவர் முதன்மை மாவட்ட நீதிபதி மு.அறிவொளி தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தலைவர் முதன்மை மாவட்ட நீதிபதி மு.அறிவொளி பேசும்போது தெரிவித்ததாவது புத்தகங்கள் நம் வாழ்கையை மெருகேற்றும் சாதனமாகவும் மாணவர்களுக்கு புத்தக வாசிப்பு என்பது நமது அன்றாட நிகழ்வின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும் எனவும், பள்ளி தேர்வு நேரங்களிலும் பொது தேர்வு நேரங்களிலும் நமது புத்தக வாசிப்பு நமது நினைவாற்றலை அதிகப்படுத்தி தேர்வுக்கு அது உறுதுணையாக இருக்கும் என தெரிவித்தார்கள். நிகழ்ச்சியில் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் திரு.யு.பசும்பொன் சண்முகையா, மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவின் செயலாளர் சார்பு நீதிபதி ஏ.ராதிகா, சிவகங்கை வழக்கறிஞர் சங்க செயலாளர் சித்திரைச்சாமி, மாவட்ட மைய நூலக அலுவலர் வெங்கடவேல் பாண்டி ஆகியோர் புத்தக வாசிப்பின் அவசியத்தையும் அதன் பயன்கள் குறித்தும் பள்ளி மாணவர்களுக்கு எடுத்து கூறினார். மேலும், பள்ளி குழந்தைகளுக்கு பாலியியல் குற்றம் தடுப்பு மற்றும் புகார் அளிப்பது தொடர்பாக சட்ட விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. மாவட்ட மைய நூலக நண்பர்கள் திட்டம் மூலமாக பள்ளி மாணவர்களுக்கு இலவச நூலக அடையாள அட்டை வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை நூலக நண்பர்கள் திட்ட தன்னார்வலர் எழுத்தாளார் அ.ஈஸ்வரன் செய்திருந்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளி தலைமை ஆசிரியர் ஆ.பாண்டிராணி மற்றும் மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவின் பணியாளர்கள் செய்திருந்தனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161